# அறிவித்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

### சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம்ட வகுப்பு 1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் - 2023

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளை பாடசாலை மட்டத்தில் சேர்த்துக் கொள்ளும் முகமாக சப்ரகமுவ மாகாணத்தில் நிரந்தர பதிவுபெற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தமிழ்மொழிமூல வெற்றிடங்களுக்கு மாத்திரம் நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன)

சேர்த்துக் கொள்ளல் கீழே தரப்பட்டுள்ள விதத்தில் 02 சந்தர்ப்பங்களின் கீழ் வேறுவேறாக நடைபெறும். அதற்காக குறித்த முழுமையான 02 அறிவித்தல்கள் மற்றும் மாதிரிப் பத்திரங்களை சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார விவகார அமைச்சில் இணையதளமான www.moe.sg.gov.lk இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

i. க.பொ.த. (உயர்தரம்) மற்றும் 13 ம் ஆண்டு தொடரான கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பாடங்களுக்கு.
ii. ஆரம்ப மற்றும் க.பொ.த. (சாதாரண தர) பாடங்களுக்கு.

guruwaraya.lk

அதனடிப்படையில் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல விண்ணப்பதாரிகளும் சப்ரகமுவ மாகாண கல்வி தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார விவகார அமைச்சின் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த முழுமையான அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களைக் கவனத்தில் கொண்டு, தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை அனுப்புமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

கவனிக்கவும்:
ஏதேனும் விண்ணப்பதாரி தமது தகைமையின் அடிப்படையில் மேற்படி 02 வாய்ப்புகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பின் அவர் அதற்காக குறித்த அறிவித்தலின் பிரகாரம் வேறுவேறாக விண்ணப்பங்கள் இரண்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி - 2023.11.13 ஆகும்.

**பீ.ஏ.சி.பி. பமுனு ஆரச்சி**
செயலாளர்,
கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்
கலாசார விவகார அமைச்சு,
சப்ரகமுவ மாகாணம்.

**2023.10.13 ம் திகதி**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்**
**கலாசார விவகார அமைச்சில்.**